**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
ந.க.எண். 5206/ஆ5/2025, நாள். 28/10/2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – இந்திய எரிசக்தித்துறை அமைச்சகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய அளவிலான எரிசக்தி சேமிப்பு விழிப்புணர்வு ஓவியப் போட்டிகள் – பள்ளி அளவில் நடைபெறுதல் – உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.064741/எம்2/இ2/2025, நாள். 07.10.2025

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, தேசிய அளவிலான எரிசக்தி சேமிப்பு குறித்த விழிப்புணர்வு பள்ள மாணவர்களிடையே ஏற்படுத்துதல் சார்ந்து ஓவியப் போட்டிகள் நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் தகுதி மற்றும் விண்ணப்பிக்கும் வழிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் 5 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளி அளவில் ஓவியப் போட்டி நடத்த தெரிவிக்கப்படுகிறது.

- 5ம் வகுப்பு, 6ம் வகுப்பு மற்றும் 7ம் வகுப்பு மாணவர்கள் – A பிரிவாகவும் (A – Category)
- 8ம் வகுப்பு , 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு மாணவர்கள் – B – பிரிவாகவும் (B – Category) பங்கேற்க வேண்டும்.

BEE Portal என்ற இணையளதத்தில் பள்ளியின் விவரங்களை பதிவு செய்து இரு பிரிவினருக்கும் பள்ளி அளவிலான ஓவியப் போட்டிகளை நடத்தி, A பிரிவிலிருந்து மற்றும் B – பிரிவிலிருந்து சிறந்த இரண்டு ஓவியங்களைத் தேர்ந்தெடுத்து www.paintings.bee.india.gov.in என்ற இணையத்தில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த இரண்டு ஓவியங்கள் விவரங்கள் மற்றும் மாணவர்களின் பெயர் பட்டியலுடன் (in excel format) கீழ்காணும் நோடல் அதிகாரி முகவரிக்கு தபால் மூலமாக அனுப்ப தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

The Nodal Officer,
Power Grid Corporation of India,
No.2, (Old No.16) First Lane, Bharathi Nagar,
North Usman Road, T–Nagar, Chennai – 600 017.

மாநில அளவிலான ஓவியப் போட்டி 14.11.2025 நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓவியப் போட்டிக்கான தலைப்பு –

| | | |
|---|---|---|
| 1 | Save Energy, Save Earth | மின்சாரத்தை சேமிப்போம், பூமியை காப்போம் |
| 2 | Be a Star Use BEE Star Appliances | பீஈ ஸ்டார் (BEE Star) உபகரணங்களை உபயோகிப்போம் நட்சத்திரமாக இருப்போம் |

மேற்காணும் படி ஓவியப் போட்டிகள் பள்ளி அளவில் நடத்திட தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் A பிரிவிலிருந்து மற்றும் B – பிரிவிலிருந்து சிறந்த இரண்டு ஓவியங்களைத் தேர்ந்தெடுக்கப்பட் மாணவர்களின் பெயர் பட்டியலினை பெற்று தொகுத்து b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையின் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி )
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)